அதுதான் நடைமுறையிலே சாத்தியமென்று நினைக்கின்றேன். அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புவதோடு இவர்கள் சொல்லியிருக்கிற யோசனைப்படி பள்ளிகள், கல்லூரிகள் எல்லாம் அதிக நாட்கள் வேலை செய்தால்தான் இந்த 11 ஆண்டு படிப்பை 10 ஆண்டுக் கல்வியிலே கொண்டுவர முடியும். அப்போது ஆசிரியர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் எதிர்ப்புகள் எல்லாம் வரும். அதையும் பரிசீலித்து எதை நடைமுறைப்படுத்த முடியுமோ அதைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் சொன்னதைத் தவிர, இன்னும் என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார். அவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துத்தான் நாம் முடிவு எடுக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

All India Seminar on "Mariculture" and "Mechanised Fishing"

* 305 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether any all India Seminar on "Mariculture" and "Mechanised Fishing" was conducted in the State about November 1972, at Mandapam; and

(*b*) if so, the details thereof?

கடல் மீனளம் மற்றும் விசைப்படகு மீன் பிடிப்பு பற்றிய அனைத்திந்திய கருத்தரங்கு.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972, நவம்பர் திங்கள் வாக்கில், மண்டபத்தில் "கடல் மீனள வளர்ச்சியும், விசைப் படகின் மூலம் மீன் பிடித்தலும்" என்ற பொருள் குறித்து அனைத்திந்தியக் கருத்தரங்கம் ஒன்று நடத்தப்பட்டதா?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) தமிழ்நாடு அரசு மீனளத் துறையினரால் சென்னை அடையாறு பல்துறை தொழிற் பயிற்சிக் கல்லூரியில் 1972 நவம்பர் 28, 29-ல் கடல் மீனளம் மற்றும் விசைப்படகு மீன் பிடிப்பு பற்றிய அனைத்து இந்திய கருத்தரங்கு

1973 மார்ச் 30]

ஒன்று நடத்தப்பட்டது. இக் கருத்தரங்கு, தமிழ்நாட்டு ஆளுநரின் தலைமையின்கீழ் தமிழ்நாடு முதலமைச்சரால் 28—11—1972 அன்று தொடங்கிவைக்கப்பட்டது, தமிழ்நாடு அரிசன நல அமைச்சர் முக்கிய உரையாற்றினார். இந்தியா முழுவதிலிருந்தும் 200-க்கும் மேற்பட்ட மீனள விஞ்ஞானிகளும் தொழிலதிபர்கள் பலரும் இக்கருத் தரங்கில் பங்கு கொண்டனர்.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, ஆராய்ச்சியின் மூலமாக எவ்வளவு இடங்களில் மீன் உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். பி.ப 4–20

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கருத்தரங்கே 11-வது மாதம் தான் நடைபெற்றது. இவ்வளவு சீக்கிரம் மீன் உற்பத்தி பற்றிக் கேள்வி கேட்பதே முறையானதல்ல. கருத்தரங்கை அடிப் படையாக வைத்து உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றிய பிறகுதான் சொல்ல முடியும்.

திரு. ஜார்ஜ் கோமகன் : தலைவரவர்களே, மண்டபத்தில் கட்டு மரப் படகு மூலமாக மீன் பிடிக்கப்படுகிறது என்று அறிகிறேன். இதைத் தவிர்த்து, விசைப் படகுகள் மூலமாக மீன் பிடிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுபற்றி கருத்தரங்கு கட்டுமரத்திலேயே அவுட்–போர்டு, இன்–போர்டு மோட்டார்கள் வைத்து மீன் பிடிக்க வேண்டுமென்று ஒரு சிபாரிசு செய்திருக்கிறது. விசைப் படகுகளின் விலை அதிகமாக இருக்கிற காரணத்தால் மீனவர்களால் வாங்க முடியவில்லை. ஓரளவுக்கு, மீனவர்கள் கட்டு மரத்திலேயே பழகிக்கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால், கட்டு மரத்திலேயே மோட்டார்கள் வைத்து மீன்பிடிக்க வேண்டு மென்று கருத்தரங்கு சிபாரிசு செய்திருக்கிறது. எனவே, அப்படிப் பட்ட கட்டுமரங்கள் வாங்க வேண்டுமென்பது தான் அரசின் நோக்கமாகும்.

Fishing Rights

* @ 294 *Q.*—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

@ Postponed from the list of questions for 28th March 1973.